தொழில் பூங்காக்களை உருவாக்கிடவும், தொழில் வளர்ச்சிக்கு உயிர் கொடுத்திட, சிப்காட்டின்கீழ் ஒரு சிறப்பு நோக்கு நிறுவனம் - Special Purpose Vehicle உருவாக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அது தொடங்கப்பட்டுவிட்டதா? இல்லையென்றால், எப்போது தொடங்கப்படும் என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை, தூத்துக்குடியில்* Industrial Corridor *அமைப்பதற்கான* D.P.R. *முடிந்துவிட்டது. நிலம் எடுக்கின்ற பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இப்போது* SPV *ஏற்படுத்துவதற்காக நாங்கள் ஏற்பாடு செய்து கொண்டிருக்கின்றோம். கூடிய விரைவிலே மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அங்கே சிறப்பு நோக்கு நிறுவனம் ஏற்படுத்தும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 156, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ச. துரையப்பா, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

156—

சொகுசுப் பேருந்து

***33187—டாக்டர் ச. துரையப்பா:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாசுதேவநல்லூரிலிருந்து திருவனந்தபுரம் விமான நிலையத்திற்கு சொகுசுப் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) வாசுதேவநல்லூர்-திருவனந்தபுரம் வழித் தடம், தமிழ்நாடு மற்றும் கேரளா ஆகிய இரு மாநிலங்களுக்கு இடையிலான பேருந்து இயக்கமாகும். எனவே, இத்தடத்தில் பேருந்து இயக்குவது குறித்து, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய உத்தரவைப் பெற்று, இரு மாநிலங்களுக்கிடையிலான ஒப்பந்தப் பேச்சுவார்த்தையின்போது பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ச. துரையப்பா அவர்கள்.*

டாக்டர் ச. துரையப்பா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர்; பொன்மனச் செம்மல், மக்கள் திலகம், கொடை வள்ளல், எம்.ஜி.ஆர். அவர்களின் பொற்பாதம் தொட்டு வணங்கி, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி, பொன்னியின் செல்வி அம்மா அவர்களுடைய நல்லாட்சியில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வாசுதேவநல்லூரிலிருந்து திருவனந்தபுரம் விமான நிலையம் செல்லும் பயணிகளுக்கு சொகுசுப் பேருந்து வழங்கப்படும் என்று கூறியதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், சபையிலுள்ள அனைத்து மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் எனது சார்பாகவும், தொகுதி மக்களின் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 11-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி அவர்கள்.*

திரு. மு. திராவிடமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூடலூரிலிருந்து இரண்டு அரசு விரைவுப் பேருந்துகள் கன்னியாகுமரிக்கும், சென்னைக்கும் இயக்கப்படுகின்றன. அப்பேருந்துகளுக்கான முன்பதிவு,* **Online** *மூலமாகச் செய்யப்படுவதனால், கோவையில் உள்ளவர்களும், உதகையில் உள்ளவர்களும் முன்பதிவு செய்துவிடுகின்றனர்.*

2014 ஜூலை 16]

கூடலூர் மலைப் பகுதியில் வாழ்கின்ற மக்கள் remote area-வில் வசிப்பதாலும், lack of communication இருக்கின்ற காரணத்தாலும், கூடலூர் வருவாய்க் கோட்டத்தில் உள்ள இலட்சக்கணக்கான மக்கள் அந்தப் பேருந்துகளில் பயணம் செய்யமுடியாத சூழ்நிலை ஏற்படுகிறது. இதுசம்பந்தமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் கடிதமும் அனுப்பியிருக்கின்றேன். ஆகவே, கூடலூருக்கென்று தனியாக டிக்கெட் quota அளித்து, கூடலூருக்கென தனியாக முன்பதிவு இல்லாமல் டிக்கெட் ஒதுக்கீடு செய்து கொடுக்க அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தில் ஏறக்குறைய 300 கிலோ மீட்டருக்குமேல் பயணிக்கக்கூடிய பேருந்துகளுக்கு, எங்கிருந்து எங்கு செல்லவேண்டுமானாலும், அவர்கள் இருக்கிற இடத்திலிருந்தே பயணத்திற்கான டிக்கெட்டை முன்பதிவு செய்வதற்காக, Online Ticket Reservation மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருக்கரங்களால் தொடங்கி வைக்கப்பட்டது. இன்று படித்தவர்கள், இளைஞர்கள் மத்தியிலே இது மிகப்பெரிய வரவேற்பைப் பெற்றிருக்கிறது. ஏறத்தாழ 100 சதவீத டிக்கெட்டுகளில் 42 சதவிகிதம் அளவிற்கு படித்தவர்கள், இளைஞர்கள் தங்கள் பயணத்திற்கான டிக்கெட்டை முன்பதிவு மூலமாகவே, எடுத்து பயன்படுத்தி வருகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கின்ற கூடலூர் பகுதியில் முன்பதிவு செய்வதற்குண்டான வசதி இல்லையென்று சொன்னால், அங்கே ஆய்வு செய்து, அந்தப் பகுதிக்கென்று தனியாக டிக்கெட் ஒதுக்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் உத்தரவைப் பெற்று, அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். சேன் அவர்கள்.*

திரு. சி.எச். சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் மிகப் பெரிய தொழிற்பேட்டை அமைந்துள்ள கும்மிடிப்பூண்டி மற்றும் பிரசித்தி பெற்ற பவானி அம்மன் கோவில் அமைந்துள்ள பெரியபாளையத்திலிருந்து சென்னை கோயம்பேட்டிற்கு குளிர்சாதன மாநகரப் பேருந்து இயக்க அரசு முன்வருமா எனத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பை ஏற்கின்றபோது 43 ரூபாய் 10 பைசாவாக இருந்த டீசல் விலை, இந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் 64 ரூபாய் 70 பைசாவாக, ஏறத்தாழ 21 ரூபாய் 60 பைசாவாக 50 சதவீத அளவிற்கு உயர்ந்திருக்கிறது. டீசல் விலை உயர்ந்தபோதிலும் கூட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஓராண்டிற்கு மட்டும் போக்குவரத்துக் கழகங்களுக்கு மானியத்தொகையாக 813 கோடி ரூபாய் மானியம் வழங்கியிருக்கிறார்கள். ஏழையெளிய மக்கள் சிறப்பான பேருந்து வசதிகளைப் பெறவேண்டும் என்பதற்காக 1,436 புதிய வழித்தடங்களை மக்களுடைய பயன்பாட்டிற்காக மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். இப்படி மக்களுடைய பயன்பாட்டிற்காக எங்கெங்கு பேருந்துகளின் தேவை இருக்கின்றதோ, அந்தப் பகுதிகளில், அவை கிராமங்களாக இருந்தாலும் சரி, நகரங்களாக இருந்தாலும் சரி, அனைத்துப் பகுதிகளிலும் உள்ள மக்கள் சிறப்பான பேருந்து வசதிகளைப் பெறவேண்டுமென்ற நோக்கத்தோடு, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டுகின்ற அவருடைய தொகுதியில் உள்ள சிறுவாபுரியிலிருந்து கோயம்பேட்டிற்கு சிறப்புப் பேருந்துகள்கூட இப்போது மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் உத்தரவோடு இயக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற வழித்தடத்தில் பயணிகளினுடைய எண்ணிக்கை அதிகமாக இருக்கும்பட்சத்தில், ஆய்வு செய்து, அதற்குண்டான நடவடிக்கைகள் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய

2014 ஜூலை 16]

உத்தரவைப் பெற்று எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 157, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

157—

கால்நடைப் பண்ணை

***17603—திரு. ஏ. லாசர்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியகுளம் தொகுதி, தேனியில் மாவட்ட கால்நடைப் பண்ணை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பெரியகுளம் தொகுதியிலே ஒரு கால்நடை பண்ணை அமைக்க மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே கால்நடை பராமரிப்புத் துறையின்கீழ் 18 கால்நடைப் பண்ணைகள் செயல்பட்டு வருகின்றன. அவற்றிலே 8 கால்நடைப் பண்ணைகளும், மூன்று ஆட்டுப் பண்ணைகளும், ஒரு பகுதிநேரப் பண்ணையும் செயல்பட்டு வருகின்றன.

மேலும், தேனி மாவட்டத்திற்கு அருகிலே உள்ள விருதுநகர் மாவட்டத்தில், சாத்தூரிலே ஓர் ஆட்டுப் பண்ணை செயல்பட்டு வருகிறது. திருநெல்வேலி மாவட்டத்தில், அபிஷேகப்பட்டியில் மாவட்ட கால்நடைப் பண்ணை செயல்பட்டு வருகிறது. எனவே, தேனி மாவட்டம், பெரியகுளம் தொகுதியிலே கால்நடைப் பண்ணை அமைக்க தற்போது அவசியம் எழவில்லை என்பதைத் தங்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.